# පරිසර හා පුනර්ජනනීය බලශක්ති අමාත්‍යාංශය
## சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
## Ministry of Environment and Renewable Energy

"සම්පත්පාය" අංක 82, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
"சம்பத்பாய", இல: 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல, ஸ்ரீ லங்கா.
"Sampathpaya", No: 82, Rajamalwatta Road, Battaramulla, Sri Lanka.
Gen. Tel: +94 - 11 - 2882112 - 3

ලේකම් / செயலாளர் / Secretary +94 - 11 - 2877290
ෆැක්ස් / தொலை நகல் / Fax +94 - 11 - 2877292


මගේ අංකය / எனது இல / My No: 03/02/03/02/05-GSMB
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2013 .11.19

மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

**பிரதேச செயலகங்களால் வழங்கப்படுகின்ற வர்த்தக ரீதியிலல்லாத கருமங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற மணல், மண், மற்றும் சரளைக் கற்களுக்காக அறவிடப்படுகின்ற அரச உரிமைப் பங்கு திருத்தம்**

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப் பொருட்கள் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் பிரதேச செயலாளர்களால், வர்த்தக ரீதியிலல்லாத கருமங்களுக்காக மேற்படி விடயத்துடன் தொடர்புடையதாக மணல், மண் மற்றும் சரளைக் கற்களை ஏற்றிச் செல்லல் மற்றும் அகழ்வதற்கான உரிமப் பத்திரங்கள் தொடர்பில் அறவிட வேண்டியதான அரச உரிமைப் பங்கு 2013.10.23 ஆம் திகதிய 1833/11 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் மேற்படி தினத்திலிருந்து வலுவுக்கு வருகின்றவாறு திருத்தப்பட்டுள்ளது.

இதற்கிணங்க எனது இலக்கம் 02/06/02/09(x)-GSMB மற்றும் 2011.11.09 ஆம் திகதிய கடிதத்தின் இரண்டாவது பந்தியின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுரையின் பிரகாரம் பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும். (மேற்படி கடிதத்தின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

1. **ஒரு (1) கியூப் மணலுக்கு** — **ரூபா 179.20 (வெற் வரியுடன்)**
2. **ஒரு (1) கியூப் மண் / சரளைக் கல்லுக்கு** — **ரூபா 22.40 (வெற் வரியுடன்)**

ஆதலால் மேலே குறிப்பிட்டப்பட்டுள்ள திருத்தப்பட்டவாறான கட்டணத்தை அறவிட்டு உரிமப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

இக் கடிதம் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது (ஆம் இலக்க 2010.10.15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பெறப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய வெளியிடப்படுகின்றது.

பி.எம்.யு.டி. பஸ்நாயக்க
செயலாளர்
சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு

பிரதிகள்:

1. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
2. பொலிஸ் மாஅதிபர், இலங்கை பொலீஸ்
3. தலைவர், புவிச் சரிதவியல்அளவை, சுரங்கங்கள் பணியகம்

} கவனத்திற்கு மற்றும் அவசியமான நடவடிக்கையின் பொருட்டு

පරිසර අමාත්‍යාංශය
# சுற்றாடல் அமைச்சு
## Ministry of Environment

"සම්පත්පාය" අංක 82, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சம்பத்பாய" இல. 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
"Sampathpaya" No. 82, Rajamalwatta Road, Battaramulla, Sri Lanka.
Gen. Tel: +94 - 11 - 2882112 - 3

ලේකම් / செயலாளர் / Secretary +94-11-2877290
ෆැක්ස් / பெக்ஸ் / Fax +94-11-2877292

මගේ අංකය / எனது இல. / My No. 02/06/02/09(x)-GSMB
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2011.11.09

மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

### பிரதேச செயலகங்களால் வழங்கப்படுகின்ற வர்த்தக ரீதியிலல்லாத கருமங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற மணல், மண், மற்றும் சரளைக் கற்களுக்காக அறவிடப்படுகின்ற அரச உரிமைப் பங்கு திருத்தம்

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப் பொருட்கள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் பிரதேச செயலாளர்களால், வர்த்தக ரீதியிலல்லாத கருமங்களுக்காக மேற்படி விடயத்துடன் தொடர்புடையதாக மணல், மண் மற்றும் சரளைக் கற்களை ஏற்றிச் செல்லல் மற்றும் அகழ்வதற்கான உரிமப் பத்திரங்கள் தொடர்பில் அறவிட வேண்டியதான அரச உரிமைப் பங்கு 2011.10.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றவாறு பணியகத்தினால் திருத்தப்பட்டுள்ளது.

இதற்கிணங்க எனது சம இலக்கமும் 2010.10.20 ஆம் திகதியையும் கொண்ட கடிதத்தின் 01 ஆம் இலக்க இணைப்பிலுள்ள 9.1 மற்றும் 9.2 ஆம் பந்திகள் முறையே பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| 1. ஒரு கியூப் மணலுக்கு | ரூபா 89.60 (வெற் வரியுடன்) |
| 2. ஒரு கியூப் மண் / சரளைக் கல்லுக்கு | ரூபா 11.20 (வெற் வரியுடன்) |

ஆதலால் மேலே உள்ளவாறு திருத்தப்பட்டவாறான கட்டணத்தை அறவிட்டு உரிமப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

கையொப்பம், ஆர்.எச்.எஸ். சமரதுங்க
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

பிரதிகள்:

1. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு - கவனத்திற்கு மற்றும் அவசியமான நடவடிக்கையின் பொருட்டு
2. பொலிஸ் மாஅதிபர், இலங்கை பொலீஸ் - கவனத்திற்கு மற்றும் அவசியமான நடவடிக்கையின் பொருட்டு
3. தலைவர், புவிச் சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம் - கவனத்திற்கு மற்றும் அவசியமான நடவடிக்கையின் பொருட்டு